விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் நாளேடு Peoples Daily

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2025 தை 19 (01-02-94) செவ்வாய்க்கிழமை ஓசை 348

Y.M.C.A.

## யாழ். மாவட்டத்தில் சிசு மரணவீதம் அதிகரிப்பு

யாழ். மாவட்டத்தில் சிசுக்களின் இறப்பு வீதம் சென்ற ஆண்டு வெகுவாக அதிகரித்துள்ளதாக யாழ். பிராந்திய சுகாதார அத்தியட்சகர் பிரிவு வெளியிட்டுள்ள வருட அறிக்கையொன்றின் மூலம் தெரியவந்துள்ளது. யாழ். மாவட்டத்தில் சென்ற ஆண்டு பிறந்ததில் இருந்து ஒரு வயதிற்கு உட்பட்ட சிசுக்களில் 35.7 விகிதமானவை இறந்துள்ளதாகவும் இதில் பிறந்து ஒருமாத சிசுக்கள் 9.5 விகிதமானவை இறந்துள்ளதாகவும், அவ் வருடாந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதே வேளை ஆறு சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகளிலும் ஆகக்கூடிய சிசுக்களின் மரண விகிதம் 47.1 சாவகச்சேரி பிரிவிலும், இரண்டாவது (4ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். ஆஸ்பத்திரி ஜெனரேட்டர் நேற்று கப்பலிலிருந்து இறக்கப்பட்டது

யாழ். போதனாவைத்திய சாலைக்குரிய ஜெனரேட்டர் வாதுவ கப்பலிலிருந்து மாலை இறக்கப்பட்டு ...ணியளவில் கரைக்கு கொண்டுவரப்பட்டன.

...ம் யாழ். குடாநாட் ...டுத்து வரப்பட்ட ...ன்களை இறக்கும் வேலை இன்றும் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

இதேவேளை சிறிலங்கா கடற்படையினரின் அனுமதி நேற்று மாலை வரை கிடைக்காததினால் தீவகத்திற்குரிய பிரிட்டிஷ் அரசின் கொள்கலன்கள் இன்றுஎடுத்துச் செல்வது தடைப்பட்டுள்ளது.

'வாதுவ' கப்பல் கப்டனுக்கு இது சம்பந்தமாக அனுமதி கிடைக்கப்பெற்ற பின்னரே இரண்டு கொள்கலன்களும் இறக்கப்படவுள்ளன. ஆகவே 'வாதுவ' கப்பல் பொருள்களை இறக்குவதற்காக இன்று பருத்தித்துறை

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## இன்றும் நாளையும் படகுச் சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்றும் நாளையும் வழமையான நேரத்திற்கு நடைபெறும். இதேவேளை தொடர்ந்து வாரம்தோறும் செவ்வாய், புதன், சனிக்கிழமைகளில் படகுச்சேவை நடைபெறும்என அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

## மட்டு. விமானநிலையப் பகுதி படையினரால் சுற்றிவளைப்பு

### பல தமிழ் மக்கள் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு விமானப் படை முகாமை அண்மித்த பல தமிழ்க்கிராமங்கள் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு பலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

புதூர், சேற்றுகுடா, திமிலத்தீவு போன்றகிராமத்தவர்களே கைதானவர்களாவர். கடந்த வெள்ளி அதிகாலை படையினர் இக்கிராமங்களை சுற்றிவளைத்தனர். வயது வேறுபாடின்றி பெருமளவு தமிழ்மக்கள் கைதாகி புதூர்விநாயகர் ஆலயத்திற்கு கூட்டிச் செல்லப்பட்டனர் பலர் முகமூடி முன் நிறுத்தப்பட்டனர். முகமூடியினால் இனங் காணப்பட்டோரும், அடையாள அட்டை இல்லாதோரும் முகாம் கொண்டு செல்லப்பட்டனர்.

# ...ரேமதாசா கால படுகொலைகள் விசாரணை செய்ய குழு நியமனம்

## மீனவர் மீது துப்பாக்கி சூடு

(யாழ்ப்பாணம்)

மீன் பிடிக்கச் சென்றவர் இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி காயங்களுக்குள்ளானார்.

நேற்று அதிகாலை அராலி தெற்கு கரைப் பகுதியை நோக்கி கடலில் மீன் பிடிக்கச் சென்ற மீனவரே துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்கானார்.

க. தெய்வேந்திரம் (41) என்ற அராலியைச் சேர்ந்த

(4ஆம் பக்கம் பார்க்க)

## ...தடிஸ்த திருச்சபையின் ...தக்குழு யாழ். வருகிறது

(கொழும்பு)

...டிஸ்த திருச்சபையை ... மதக் குழுவொன்று ... வருகிறது. யாழ்ப் ... வருவதற்காக இக் ...வர் நேற்று முன்தினம் கொழும்பிலிருந்து புற...தாக அங்கிருந்துவரும் ...ள் தெரிவிக்கின்றன. ...சபை குழுவில் பதி... பேர் இடம்பெற்றுள் ... இவர்களில் ஒருவர் ...ச் சேர்ந்தவர் தமி...

...யில் வரும் இம் மதக்குழுவில் அருட்திரு துலிப் பெர்னாண்டோ, திருமதி ஆன் அபேசேகரா, பிரிட்டனை சேர்ந்த அருட்திரு நோமன் டகட், அருட்திரு பியலால் பெரேரா, அருட்செல்வி சுமித்திரா பெர்னான்டோ, அருட்திரு அனில்சில்வா, அருட்திரு எபனேசர் ஜேக்கப், திருமதி ஜேக்கப், திருமதி பியூலா ரோசா, அருட்திரு ரோஹித சில்வா, அடியேயார் ...

## ஜனாதிபதியின் செயலர் அறிவிப்பு

[கொழும்பு]

ஜே. வி. பி காலத்தில் தென்னிலங்கையில் நடைபெற்ற படுகொலைகள் குறித்து விசாரிக்க விசாரணைக்குழு ஒன்று அமைக்கப்படும் என ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவின் செயலாளர் அறிவித்துள்ளார்.

1989முதல் 1990-ம் ஆண்டு காலப் பகுதியில் ஜே. வி. பி கிளர்ச்சியின்போது தெற்கில் இக் கிளர்ச்சியை அடக்குவதற்காக அரசு நடத்திய மனித உரிமை மீறல்கள் குற்றச்சாட்டு குறித்து விசா...படும் இக்குழுவில் ஓய்வு பெற்ற நீதிபதிகள் இடம் பெறுவர் எனவும் அவர் கூறியுள்ளார்.

ஜே. வி. பி கிளர்ச்சியின் போது தெற்கில் நடைபெற்ற ... 60 ஆயிரம் ... புதைக்கப்பட்ட மனித எலும்புக்கூடுகள் வெளியே தோண்டி எடுக்கப்பட்டதனால் எழுந்த பெரும் சர்ச்சையினால் அரசு எதிர் வரும் தேர்தல்களில் தோல்வியடைவதை தவிர்க்கவே ...

## ஒருகிலோபோதைப்பொருள் இடியப்ப உரலில் கடத்தல்

### பெண் ஒருவர் கட்டுநாயக்காவில் கைது

14லட்சம் பெறுமதி வாய்ந்த ஹெரோயின் போதைப் பொருளை இடியப்ப உரலினுள்ளும் விளக்கினுள்ளும் மறைத்து எடுத்து வந்த இந்தியப் பெண் ஒருவர் நேற்று கட்டுநாயக்கா விமான நிலையத்தில் கைதானார்.

நேற்றுக்காலை கைதான இப் பெண் 1100 கிராம் ஹெரோயினை எடுத்து வந்திருந்தார். திருவனந்தபுரத்திலிருந்து இவர் கொழும்பு வந்திருந்தார் என தெரிவிக்கப்படுகிறது.

## இ.தொ.கா பிளவை சரிசெய்ய ...

...கள் தெரிவிக்கின்றன. ...சபை குழுவில் பதி... பேர் இடம்பெற்றுள் இவர்களில் ஒருவர் ...ளை சேர்ந்தவர் தமி... வரும் இக் குழுவில் ...பறுகின்றார். அருட் ...மாபெரேரா தலை திரு அனில்சில்வா, அருட்திரு எபனேசர் ஜேக்கப், திருமதி ஜேக்கப், திருமதி பியூலா ரோசா, அருட்திரு ரோகித சில்வா ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

இக் குழுவினர் இங்கு மதத்...

(4ஆம் பக்கம் பார்க்க)

## ...ருட் பிரதிநிதிகள் மூவர் ...ளை யாழ். வருவர்

(...ழ்ப்பாணம்)
...ம்பு போருட் பிரதி... மூவர் நாளை யாழ். ...ட்டிற்கு விஜய... மேற்கொண்டு ...வுள்ளனர். ...வல், ரோர்ஒப்வே, எம்.எல். மரிக்கார் ஆகிய மூவருமே இங்கு வரவுள்ள போருட் பிரதிநிதிகளாவர். இவர்கள் இங்கு வந்ததும் எதிர்வரும் 3 ஆம் திகதி யாழ். செயலகத்திற்கு விஜயம் செய்யவுள்ளனர். (பா)

## ...ல்காணாமல்போனவர் ...ந்துவிட்டதாக அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)
...ன்... சனிக்கிழமை சுழி... ...ற்பரப்பில் கடல் ...ழிலில் ஈடுபட்டுக்கொண் ...தவேளை கடற்படை...ன் தாக்குதலின்போது ...ாமல் போனவர் இறந்...ததாக ஊர்ஜிதம் செய்...ட்டுள்ளது.

...ழிபுரம் இறாத்தலடியைச் ...ர்ந்த மூன்று பிள்ளைகளின் ...ந்தையான ஆறுமுகம்சோம...ந்தரம் (வயது 47) என்ப...ரே இறந்துள்ளதாக ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது.

அன்றைய சம்பவத்தின் போது இறந்தவருடன் கூட தொழிலிற்குச் சென்றவர் இதனை ஊர்ஜிதம் செய்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. இதனை அடுத்து மேற்படி நபர் இறந்ததை ஊர்ஜிதம் செய்து யாழ். செயலகத்திற்கும் சுழிபுரம் கடற்தொழிலாளர் சங்கம் அறிக்கை ஒன்றை வழங்கியுள்ளது. என யாழ். செயலக பதில் அரச அதிபர் தெரிவித்தார்.

...லி - வடக்குப் பகுதியில்

## இராணுவப் பிடியில் சிக்கிய ஐவர் விடுதலையாகினர்

(கொழும்பு)
...வலி - வடக்கு இராணுவ ...வடிக்கைகளின் போது ...ராணுவத்தினரின் பிடியில் ...குண்ட பொதுமக்களில் ...வர் விடுதலையாகி இன்று ...ழ். வருகின்றனர். மாத... இளவாலை பகுதியில் ...டையினரிடம் சிக்கிய இவர் ...ள் இன்று காலை காங்கேசன்துறையிலிருந்து கப்பல் மூலம் பருத்தித்துறை வந்தடைவர்.

இவர்களை சர்வதேச செஞ்சிலுவை சங்கப் பிரதிநிதி செல்வி ஜோசப்பின் டோலி அழைத்து வருகிறார் விடுவிக்கப்பட்ட ஐவரும் வயதானவர்கள் எனத் தெரிய வருகிறது.

...இக் கிளர்ச்சியை அடக்குவதற்காக அரசு நடத்திய மனித உரிமை மீறல்கள் குற்றச்சாட்டு குறித்து விசாரணை நடத்த மனித உரிமைக்குழு ஒன்று அமைக்கப் ...கூறியுள்ளார்.

ஜே. வி. பி கிளர்ச்சியின் போது தெற்கில் நடைபெற்ற வன்முறைகளில் 60 ஆயிரம் பேர் பலியானது தெரிந்ததே. அண்மையில் சூரியகந்தவில் ...தினால் ... சர்ச்சையினால் அரசு எதிர் வரும் தேர்தல்களில் தோல்வியடைவதை தவிர்க்கவே இம் முயற்சியில் இறங்கியுள்ளதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

# ஐ.நாவின் மனித உரிமைகள் குழுவை திருப்திப்படுத்தவே விசாரணைக் குழு

(லண்டன்)
மனித உரிமை தொடர்பான ஐ.நாவின் கூட்டத்தில் கலந்து கொள்ளும் வேளையில் மக்களின் அடிப்படை உரிமைகளை பாதுகாப்பதற்காக விசாரணைக் குழுவை அமைக்கவுள்ளதாக சிறிலங்கா அரசு அறிவித்துள்ளது என அரசு புதிதாக நியமிக்கப்படவுள்ள மனித உரிமை மீறல் தொடர்பான விசாரணைக்குழு குறித்து கருத்து தெரிவித்த பி.பி.ஸி குறிப்பிட்டது.

ஜே. வி. பி. கிளர்ச்சியின் போது கொல்லப்பட்டவர்களின் குடும்பங்களின் இன்னல்களை போக்க அவர்களுக்கு உதவ சில குறிப்பிட்ட சட்ட திருத்தங்களையும் அரசு அறிவித்துள்ளதாக பி.பி..ஸி. மேலும் தெரிவித்தது. ஐ.நா. சபை மனித உரிமை கூட்டத்தில் தனது பெயருக்கு பங்கம் ஏற்படுவதை தடுக்கவே சிறிலங்கா அரசு எப்போதும் போல் விரைந்து

( 4 ஆம் பக்கம் பார்க்க )

60 ஆயிரம் பேர் கொலைகளுக்கு காரணமான

## படையினரை விசாரிக்க சிறிலங்கா அரசு தயக்கம்

(கொழும்பு)
60 ஆயிரம் சிங்கள மக்கள் காணாமல்போனதற்கு காரணமான படையினரை விசாரணை செய்ய சிறிலங்கா அரசாங்கம் தயங்குகிறது என சிறிலங்கா மனித உரிமை இயக்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

சிறிலங்கா ஜனாதிபதியின் செயலாளர் அறிவித்த புதிய விசாரணைக் குழு குறித்து கருத்துத் தெரிவிக்கும்

(4ஆம் பக்கம் பார்க்க)

## பகுதிநேர ஆங்கில ஆசிரியர் நியமனம் குறித்து விளக்கம்

தற்போது பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களாக நியமனம் பெற்று கல்வி கற்பிக்கும் அனைத்து ஆசிரியர்களும் அவர்களுக்கென வழங்கப்பட்ட சம்பள அடிப்படையிலான ஒரு வகுதியைச் சேர்ந்தவர்களாவர். இவர்கள் மறு அறிவித்தல்வரை தொடர்ந்து சேவையாற்றலாம்.

சென்ற வருட பிற்பகுதியில் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களை சேர்ப்பதற்கு எடுக்கப்பட்ட விண்ணப்பங்கள் கல்வி அமைச்சின் உரிய பிரிவுக்கு அனுப்பப்பட்டுள்ளன. இது பிறிதொரு வகுதியைச் சேர்ந்ததாகும். இந்த வகுதியைச் சேர்ந்த ஆசிரியர்களை நியமிப்பது தொடர்பாக கல்வித்திணைக்களத்திற்கு எந்தவித அறிவித்தலும் இல்லை. அறிவித்தல் கிடைக்குமிடத்து பத்திரிகை வாயிலாக வெளிப்படுத்தப்படும்.

2வது வகுதியைச் சேர்ந்த பகுதிநேர ஆங்கில ஆசிரிய நியமனத்திற்குவிண்ணப்பிக்க

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## க. பொ. த. விடைத்தாள் 5ஆம் திகதி திருத்தம்

(யாழ்ப்பாணம்)
சென்ற டிசம்பர் மாதம் யாழ். மாவட்டத்தில் நடைபெற்ற க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையின் விடைத்தாள்கள் இம் மாதம் 5ஆம் திகதியே மதிப்பீடு செய்யப்படவுள்ளதாக யாழ். வலயம் 1 கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. துரைதியாகராசா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; யாழ். மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களின் விடைத்தாள்கள் மதிப்பீடு முடிவடைந்து விட்டதாக தெரிவித்தார். இங்கிருந்து தாமதமாகியே விடைத்தாள்கள் எடுத்துச் செல்லப்பட்டமையும் இதற்கொரு காரணமாகும் என தெரிய வருகின்றது.

மேற்படி யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த விடைத்தாள்கள் திருகோணமலை,

(4ஆம் பக்கம் பார்க்க)

## வயிற்றோட்டத்திற்கு குழந்தை பலி

(வடமராட்சி)
பொலிகண்டி சோரும் புலத்தைச் சேர்ந்த ஒன்பது மாதக் குழந்தை ஒன்று வயிற்றோட்டத்திற்கு இலக்காகி மரணமானது.

கிருஷ்ணபிள்ளை - சிவானந்தன் என்ற குழந்தையே பலியானது. (யோ)

# இ.தொ.காபிளவைசரிசெய்ய அரசு முன்வரவேண்டும்

செல்லச்சாமிகோரிக்கை

(கொழும்பு)
இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் சௌ. தொண்டமானுக்கும் அதன் பொதுச்செயலாளர் எம்.எஸ். செல்லச்சாமிக்கும் இடையேயானபிளவு மேலும் அதிகரித்துள்ளபோதும் இப் பிரச்சினையை சமரசப் பேச்சு மூலம் தீர்த்துக் கொள்ள தான் தயார் என பொதுச் செயலாளர் எம். எஸ். செல்லச்சாமி தெரிவித்துள்ளார்.

சந்தேசிய வானொலிக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். காமினி திசாநாயக்கா ஐக்கிய தேசிய கட்சியில் சேர்ந்ததை தொடர்ந்து இப்பிரச்சினை மேலும் அதிகரித்து வருவதாகவும் இ.

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## அமெரிக்காவில் திருட்டில் நான் ஈடுபடவில்லை

இராணுவ அதிகாரி கூறுகிறார்

(கொழும்பு)
அமெரிக்க இராணுவப் பயிற்சிக் கல்லூரியில் நடைபெற்ற திருட்டுச் சம்பவம் ஒன்றில் இலங்கையின் உயர் இராணுவ அதிகாரியான லெப்டினன்ட் கேணல் கொத்தலாவலை சம்பந்தப்பட்டிருப்பதாக வெளிவந்த செய்தி தொடர்பாக தற்போது புதிய தகவல்கள் வெளிவந்துள்ளன.

இப் புதிய தகவல்களை இத் திருட்டுச்சம்பவத்தில் சம்பந்தப்பட்டிருந்த மேற்படி இராணுவ அதிகாரியே பத்திரிகைகளுக்குவழங்கியுள்ளார்.

இச் சம்பவத்தின் போது இந்த இராணுவ அதிகாரி பெண்களின் ஆடை ஒன்றையும், கணிப்பொறி ஒன்றையுமே திருட்டுத் தனமாக கைப்பற்றியதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அவ் இராணுவ அதிகாரி கூறும் போது தனது மனைவிக்காக ஆடை ஒன்றும் மகனுக்காக கணிப் பொறி ஒன்றும் உட்பட பல பொருள்களை அங்கிருந்த கடையில் வாங்கினேன் என்றும் மேற்படி இரு பொருள்களையும் பொருள்களுக்கான சிட்டையில் குறிப்பிடுவதற்கு அக்கடையின் ஊழியர் தவறியமையாலேயே இப் பொருள்கள்

( 4 ஆம் பக்கம் பார்க்க )

# வரி விளம்பரம்

## வீடு விற்பனைக்கு

நீர்வேலி பருத்தித்துறை பிரதான வீதியில் 4 பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: திருமதி வ. கார்த்திகேசபிள்ளை, 6வது மைல்கல், நீர்வேலி தெற்கு, நீர்வேலி, (7380)

## சைனீஸ் உணவு சேவை

மதிய உணவு - மீன், இறைச்சி, முட்டை, மரக்கறி - 11.30 - 2.00 திருமணம், பிறந்தநாள், பிரியாவிடை - புரியாணி, பிறைட் றைஸ், பிறைட் நூடில்ஸ், சிற்றுண்டி வகை நாடவேண்டிய முகவரி. KARUNIYA CHINESE HOTEL 166 IST CROSS STREET JAFFNA. (7384)

## நிர்வாகிகள் தெரிவாகினர்

(யாழ்ப்பாணம்)

நாவற்குழி லவனிதா குடியிருப்பின் 1994ஆம் ஆண்டிற்கான புதிய நிர்வாக தெரிவுப் பொதுக்கூட்டம் 30ஆந் திகதி இரவு குடியிருப்புப் பொறுப்பாளர் திரு: தேவன் தலைமையில் நடைபெற்றது. குடியிருப்பில் உள்ள சீவல் தொழிலாளர் சங்கம், வர்த்தகர் சங்கம், மாவீரர் படிப்பகம், விளையாட்டுக் கழகம் ஆகியவற்றிற்கு தனித்தனியே இத்தெரிவுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது. (22)

## க.பொ.த (உ/த)வகுப்பு ஆரம்பமாகவுள்ளது

(யாழ்ப்பாணம்)

அண்மையில் வெளியாகிய தமிழீழப் பொதுக் கல்வித் தேர்வின் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டு புதிய க. பொ. த. உயர்தர வகுப்புக்கள் பெப்ரவரி மாதம் 14ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் அனுமதி பெற விரும்பும் மாணவர்கள் உடன் தொடர்பு கொள்ளுமாறும் புங்குடுதீவு மகாவித்தியாலய அதிபர் திரு: ந. தர்மபாலன் அறிவித்துள்ளார்: (22)

## இறங்குதுறை திருத்தப்படுகிறது

கடந்த வருடப் பிற்பகுதியில் பெய்த பலத்த மழையினாலும் கடல் கொந்தளிப்பினாலும் சேதமடைந்த பருத்தித்துறைஇறங்குதுறைப்

# மாணவர் திறன்வெளிப்பட கல்வி உதவ வேண்டும்

## கல்விப்பணிப்பாளர் கந்தசாமி

(வடமராட்சி)

பரீட்சை நோக்குக்காக கல்வியமையாமல் மாணவர்களது திறன்களை வெளிக்கொணருவதற்கும் மாணவர்களது சிந்திக்கும் ஆற்றலை வளர்ப்பதற்கும் இவ்விதமான இசழ்கள் வெளியீடு உதவுகின்றது.

கரவெட்டி விகனேஸ்வராக் கல்லூரி உயர்தர மாணவர்களின் 'ஏணி' இதழ் வெளியீட்டு வைபவத்தில் பாடசாலை மண்டபத்தில் உயர்தர மாணவர் மன்றத் தலைவர் செல்வன் க. கர்ணன் தலைமையில் நடைபெற்றபோது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். வடக்கு கல்விப்பணிப்பாளர் திரு. கே. கந்தசாமி முன்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கும் போது, ஐசாக் நியூட்டன் என்ற விஞ்ஞானிக்கு அப்பிள் பழம் கீழே ஏன் விழுந்தது என்று நோக்காமல் ஏன் அப்பிள் பழம் மேலே செல்லவில்லை என்ற நோக்கில் சிந்தித்தமையால் தான் பல பிரச்சினைகளுக்கு தீர்வாக அமையக் கூடிய உண்மைகள் அறியப்பட்டன

எனவே கேள்வி கேட்கும் முறைக்கேற்ப சிந்தனை ஆற்றல் வளரும். மாணவர்களது சிந்தனை ஆற்றலை சித்திரம் கணித பாடங்களினூடாக வளர்க்கலாம் வெட்கப்படும் தன்மை பய உணர்வு என்பன மாணவர்களின் திறனை வெளிக்கொணர்வதற்கு தடையாகவுள்ளது என்றார். மற்றும் பலரும் உரை நிகழ்த்தினர்.

இவ் வைபவத்தின் போது தமிழீழத் தேசியக் கொடியேற்றல், மங்கள விளக்கேற்றல், சிறப்புரைகள், ஆய்வுரைகள் என்பன இடம்பெற்றன. (யோ)

# திறப்புவிழா நடந்து ஒரு வருடத்தில் மூடுவிழா

## சிறுவர் வைத்திய நிலையத்தின் அவலநிலை

(கொழும்பு)

திறப்புவிழா நடத்தப்பட்ட ஒரு வருடத்தில் மூடுவிழாவும் நடத்தப்பட்ட சம்பவமொன்று அண்மையில் பொகவந்தலாவ பகுதியில் இடம்பெற்றுள்ளது. பொகவந்தலாவ நகரில் இருக்கும் வைத்தியசாலையில் சிறுவர் சிகிச்சை நிலையம் ஒன்று சுவீடன் நாட்டின் உதவியுடன் சுமார் நாற்பது லட்ச ரூபா செலவில் அமைக்கப்பட்டது: சிமிர்னார் தேவாலய நிறுவனத்தின் அன்பளிப்பான இந் நிலையம் அண்மையில் சம்பிரதாய பூர்வமாக திறந்தும் வைக்கப்பட்டது: ஆனாலும் இப்பிரிவில் பணியாறறபெண் ஊழியர்கள் நியமிக்கப்படவில்லை. பல முறை வேண்டுகோள் விடப்பட்ட போதும் கூட ஊழியர்கள் நியமிக்கப்படாததையடுத்து இவ் வைத்திய நிலையம் மூடப்பட்டுள்ளது. அமைச்சர்கள் மற்றும் அரசியல்வாதிகளால் கோலாகலமாக திறக்கப்பட்ட இவ் வைத்திய நிலையம் ஊழியர் நியமிக்கப்படாததால் மூடப்பட்டதையிட்டு இப் பகுதிமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கல்முனையில்

# பாதிப்புற்ற வீடுகளுக்கு கனடா தூதுவர் விஜயம்

(கொழும்பு)

கல்முனை பிரதேசத்திற்கு அண்மையில் விஜயம் செய்த கனேடிய தூதுவர் இராணுவ நடவடிக்கை மற்றும் வனசெயல்களால் பாதிக்கப்பட்ட வீடுகளை சென்று பார்வையிட்டார். இடம்பெயர்ந்து மீண்டும் குடியேறிய மக்களையும், அவர் அம்பாறை செல்லும் வழியில் பார்வையிட்டார்.

உலக கனேடிய பல்கலைக் கழகத்தின் உதவியுடன் கல்முனை கார்மேல் பாத்திமா கல்லூரியில் நடைபெறும் தமிழ் மொழி மூல தட்டெழுத்து மற்றும் சுருக்கெழுத்து பயிற்சிகளை பார்வையிட்ட கனேடிய தூதுவர் பயிற்சி பெறும் மாணவர்கள் மத்தியில் உரையாற்றினார்.


# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

# A/L 94 DAY CLASSES

ஆரம்பமாகியுள்ளன (8A.M—2P.M)

பொருளியல்: திரு. க. கலாகரன்
கணக்கியல் : திரு. S. K. பிரபாகரன்
வர்த்தகம் : திரு. T. வரதன்

ஏனைய பாடங்களும்

- கடந்தகால வினாக்கள்; மாதிரி வினாக்கள்; மீட்டல் என்பன குறிப்புகளுடன் செய்யப்படும்.
- திறமைமிக்க பட்டதாரி ஆசிரியர்களின் சேவையை வழங்கும் ஒரே நிறுவனம் இதுவே,
- உடன் அனுமதிகளைப் பெறவும். (சி-8486)

# ரிவி-டெக்-ஜெனரேற்றர் வாடகை தொழில் செய்வோருக்கு!

யாழ். மாவட்டத்திலுள்ள தனிப்பட்ட முறையில் ரிவி-டெக்-ஜெனரேற்றர் வாடகைக்கு கொடுத்து தொழில் செய்யும் சகலரும் 10-02-1994க்கு முன்பாக கோட்ட ரீதியில் கீழ்க்கண்ட இடங்களில் பதிவு செய்து கொள்ளவும்.

1) வலிகாமம் சகல பிரிவும் — கலை ஊடக இணையம் யாழ்ப்பாணம்.
2) வடமராட்சி கோட்டம் — வீடியோ எஞ்சினியறிங் நெல்லியடி
3) தென்மராட்சி கோட்டம் — ராஜஸ்தான் வீடியோ மந்துவில் கொடிகாமம்

117, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

செயலாளர்
கலை ஊடக இணையம்
(இ-8489)

# யாழ். மாவட்ட புகைப்படப்பிடிப்பாளர்களுக்கு!

யாழ் மாவட்டத்திலுள்ள சகல புகைப்படப்பிடிப்பாளர்களும், கலை ஊடக இணையத்தில் அங்கத்தவராக இணைக்கப்பட்டுள்ளீர்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். உங்கள் அங்கத்துவத்தை உறுதிப்படுத்த 10-02-1994க்கு முன்பாக அங்கத்தவராக பதிவு செய்து கொள்ளும்படி அன்புடன் வேண்டுகிறோம்.

117, மானிப்பாய்வீதி, ஐந்துசந்தி, யாழ்ப்பாணம். (இ/8490)

செயலாளர்
கலை ஊடக இணையம்,

# ஒளிவீச்சு (மார்கழி 1993)

ஃ சகல வீடியோ நாடா விநியோகஸ்தர்களும் மார்கழி மாத ஒளிவீச்சை கலை ஊடக இணையத்தில் தவறாது பதிவு செய்து (RECORDING) பெற்றுக் கொள்ளவும்.


# 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 13 02 62

ஆண்டவன் அடியில் 04 02 91

## விநாயகமூர்த்தி கருணாகரன்

திதி - 01-02-94

பாசமிகு மகனே! எம் பண்புள்ள கருணாவே!
நேசமிகு மனைவியும் மகனும்
அன்புள்ள அப்பாவும் அம்மாவும்
சகோதரரும் அம்மம்மாவும்
உற்றார் உறவினரும்
உன் துயரம் தாங்காமல் ஏங்கியே நிற்கிறோம்.

மில் ஒழுங்கை, மல்லாகம். (7376)

விநாயகமூர்த்தி (அப்பா)

# 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம் 13.07.1913

மறைவு 02.01.1994

## கதிரேசு தங்கவேலு (பத்தர்)

ஆச்சாரியார்

எமது குடும்பத்தலைவர் மறைவையிட்டு மிகவும் வேதனை அடைகிறோம். அவரின் ஆத்மா சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் இல்லத்தில் (1-2-94) செவ்வாய் இன்று நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர் நண்பர்களைக் கேட்டுக்கொள்கின்றோம்.

75 பெரியதம்பிரான் றோட் வண்.வடமேற்கு. (7370)

— குடும்பத்தினர்

# நினைவு கூருகின்றோம்..

பருத்தித்துறைஇறங்குதுறைப் பகுதிகள் புனரமைப்புச் செய்யப்பட்டுவருகின்றன. (யோ )

## பேச்சுப் போட்டி

(கொழும்புத்துறை)

தென்மராட்சி கல்விக் கோட்டத்தில் பேச்சுப் போட்டி ஒன்றை நடத்துவதற்கான ஏற்பாடுகளை சரசாலை இந்து இளைஞர் மன்றம் மேற்கொண்டுள்ளது. இப்போட்டிக்கான விண்ணப்பங்கள் இன்றுவரை ஏற்றுக் கொள்ளப்படுமெனவும். போட்டிகள் எதிர்வரும் பத்தாம் திகதி நுணாவில் சிதம்பர விநாயகர் ஆலயத்தில் இடம்பெறும் எனவும் கூறப்பட்டுள்ளது. (24)

## விசேட வகுப்புகள் ஆரம்பம்

(தொல்புரம்)

சித்தன்கேணி வாழ் மாணவர் கல்வி நலன் கருதி தமிழீழ விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினால் வட்டுத் தொண்டேயம் மண்டபத்தில் நடாத்தப்படும் சித்தன்கேணி கல்வி வளர்ச்சிக் கழகத்தில் நடப்பு ஆண்டிற்கான விசேட வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மேற்படி இலவச விசேட வகுப்புகள் ஆண்டு 11 ல் கல்வி கற்கும் மாணவர்க்கும், ஆண்டு 5 புலமைப் பரீட்சைக்கான கல்வி நெறி வகுப்புக்களும், சிறந்த முறையிலான கல்வி வசதிகளுடன் போதிக்கப்படுகின்றன. அத்தோடு ஆண்டு 1 முதல் ஆண்டு 11 வரை பகல் வேளை கல்வி வகுப்புக்களும், பெற்றோமாக்ஸ் லாம்பு வெளிச்ச வசதிகளுடன் மீட்டல் (சுயகல்வி) வகுப்புகளும் நடாத்தப்படுகின்றன இவ் இலவச கல்விச் சேவையினால் பல வறிய குடும்பங்களைச் சேர்ந்த் மாணவ மாணவியர் பெரும் பயனடைந்து வருகின்றனர் (41)

செல்லும் வழியில் பார் ... யில் உரையாற்றினார்.

## தொழிலாளர்வேலைநீக்கம் பூகொடை ஆலை மூடுவிழா

(கொழும்பு)

பூகொடை புடைவை உற்பத்தி தொழிற்சாலையின் 2200 ஊழியர்களும் வேலையிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டிருப்பதுடன் தொழிற்சாலையும் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது:

ஆயிரம் ரூபா சம்பள உயர்வு கோரி 2200 ஊழியர்களும் சட்டப்படி வேலை செய்யும் இயக்கத்தை ஆரம்பித்ததையடுத்தே இவர்கள் வேலையிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

## கிராமிய உற்பத்திக்குழுக்கள் நெற் செய்கையில் ஈடுபாடு

கிராமிய உற்பத்திக்குழுக்களுக்கு 25,000 ரூபா மான்யமாக வழங்கப்பட்டு அவற்றினூடாக தலா மூன்று ஏக்கர் நிலத்தில் நெற்செய்கை மேற்கொள்ளும் திட்டத்தை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கிளிநொச்சிக் கோட்டத்தினர் முன்னெடுத்து வருகின்றனர்.

துணுக்காய், திருநகர்: புளியம்பொக்கணை ஆகிய கிராமிய உற்பத்திக் குழுக்களில் இத் திட்டம் முதற் கட்டமாக அமுலாக்கப்பட்டு வருகிறது.

இத்தகைய நடவடிச்சைகளால் மக்கள் கூட்டு முயற்சி அடிப்படையில் தமது கிராமத்தின் வளங்களை உச்ச அளவில் பயன்படுத்தும் நிலையை அடையலாமென்று கிளிநொச்சிக் கோட்ட கிராமிய உற்பத்திக் குழுக்கள் கருத்து வெளியிட்டுள்ளன.

## ஜேர்மன் உதவியின் கீழ் மலசலகூடம் அமைப்பு

இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்துள்ள மக்கள் வாழும் முகாம்களில் ஜேர்மன் உதவித் திட்டத்தின் கீழ் தேச நிர்மாணிகளால் நிரந்தரமான மலசல கூடங்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டு வருகின்றன.

இதன் ஆரம்ப கட்ட நடவடிக்கையாக தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அமைந்துள்ள நீதவான் இல்ல முகாமிலே 7 மலசல கூடங்களும், உடுவில் அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள ஆச்சிரமம் முகாம், வளன் முகாம், திலீபன் முகாம், கல்லா கட்டுவன் முகாம், சுண்முகம் முகாம், வினாத்தியடி முகாம், மல்வம் முகாம் ஆகிய ஏழு முகாம்களுக்கும் தலா 7 மலசல கூடங்களும் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

அத்தோடு சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலே அமைந்துள்ள சிலன் முகாம், ஆனைக்கோட்டை சுந்தி முகாம் ஆகியவற்றில் 7 மலசல கூடங்களும், அட்டகிரியாவில் முகாம் ஆகியவற்றில் தலா 5 மலசல கூடங்களும் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

... (RECORDING) பெற்றுக் கொள்ளவும்.

ஃ இதுவரை தமிழீழத்தில் தயாரித்து வெளிவந்த ஒளிவீச்சும் மற்றும் ஏனைய வெளியீடுகளையும் எம்மிடம் பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம்.

ஃ கலை ஊடக இணையத்தில் அங்கத்துவம் பெற்ற சகல உறுப்பினர்களும் 10-02-94 வியாழன் அன்று தங்கள் தொழில் அங்கத்துவ அட்டையைப் பெற்றுக் கொள்ளவும.

செயலாளர்,
கலை ஊடக இணையம்,
117, மானிப்பாய் வீதி,
ஐந்துசந்தி, யாழ்ப்பாணம்.

(சி-8488)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு:
27 - 07 - 1974

வீரச்சாவு:
05 - 02 - 1991

### வீரவேங்கை தமிழ்மணி
(இரத்தினம் - நிரஞ்சன்)
(அக்பர் வீதி, கோண்டாவில் வடக்கு)

அச்சம் அறியாத அடலேறே!
அன்னைத் தமிழ்மண் காத்திட
அண்ணன் பிரபா வழி எழுந்த புலியே!
தச்சன் காட்டு மண் மீது
துச்சம் உயிரென்று உன்னுயிர்
தூக்கி எறிந்து, தமிழனின்
தன்மானம் நிலைநாட்டினாய்!
அன்னியப்படையினை
அடித்து விரட்டினாய்!

(இதே தினம் இவருடன் வீரச்சாவணைத்த அனைத்துப் போராளிகளையும் நினைவுகூருகிறோம்)

(சி-8485)

- குடும்பத்தினர்

## நினைவு கூருகின்றோம்..

## 1994-02-01

1985ஆம் ஆண்டு இத்தினத்தில் மன்னார்- பள்ளமடுப் பகுதியிற் சிறிலங்கா ராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**2-ம் லெப். பீரிஸ்** (மனுவல் ஞானப்பிரகாசம்- கர்த்தர் கோயிலடி, வட்டக்கண்டல்-மன்னார்)

**ஜெராட்** (காங்கேசு இராசலிங்கம் - பெரியகடை- மன்னார்)

1987ஆம் ஆண்டு மட்டு - கொக்கட்டிச்சோலைப் பகுதியிற் சிறிலங்கா அதிரடிப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**2-ம் லெப். செந்தூரன்** (சிவகுரு சத்தியநாதன் - பழுகாமம் - மட்டு)

1988ஆம் ஆண்டு மட்டு - வவுணத்தீவுப் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**எஸ்.பி.** (சாமியப்பு றேமசிவா - காரைதீவு 02- அம்பாறை)

முல்லை - ஒட்டிசுட்டான், முத்தையன்கட்டுப் பகுதியில் இந்தியப்படையினர் சுற்றிவளைத்து மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

**றோஸ்மென்** (சி. பாஸ்கரன் - கனகரத்தினபுரம், ஒட்டிசுட்டான் - முல்லை)

1989ஆம் ஆண்டு மன்னார் - பண்டிவிரிச்சான் பகுதியில் மிதிவெடியில் சிக்கிக் காயமுற்ற நிலையில் சயனைட் உட்கொண்டு எமைப்பிரிந்த-

**குணம்** (செல்லையா ரவீந்திரராசா - செட்டிகுளம் - வவுனியா)

கிளி - அக்கராயன்குளம் பகுதியில் பெருந்திறகாக் காத்து நின்றபோது இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட அதே மாவட்டத்தைச் சேர்ந்த 4 தமிழ் விவசாயிகள் மற்றும் யாழ் - சுழிபுரத்தைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்,

1993ஆம் ஆண்டு இயக்கச்சிப் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட திடீர்ச்சமரில் வீரச்சாவெய்திய-

**2-ம் லெப். பாந்தன்** (சின்னையா ஆனந்தன்- தும்பளை - பருத்தித்துறை)

ஆனையிறவு இராணுவமுகாமிலிருந்து ஏவப்பட்ட எறிகணைத்தாக்குதலில கொல்லப்பட்ட எழுதுமட்டுவாளைச் சேர்ந்த இளம்பெண் ஒருவர்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(சி-8484)

### சிந்தனைக்கு

உண்மை கற்பனையை விட விந்தையானது.
கற்பனை சாத்தியக்கூறுகளுள் கட்டுப்பட வேண்டும்.
உண்மைக்கு அத்தகைய கட்டுப்பாடு கிடையாது.

- மார்க் ட்வெய்ன்ட் -

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 01-02-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023
தபால் பெட்டி எண் 05

# இந்தியா - சிறிலங்கா கூட்டாகப் புதிய சதி

''தென் இந்தியாவில் சீர்குலைவை ஏற்படுத்தும் முயற்சியாக இலங்கைத் தமிழ்ப் போராளிகள் அமைப்பான விடுதலைப் புலிகளைப் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது எனப் பாகிஸ்தானை அமெரிக்காவும், பிரிட்டனும் எச்சரித்துள்ளன'' இவ்வாறு சிறிலங்கா அரசதரப்பு செய்திகள் தெரிவிப்பதாக இந்திய யூ. என். ஐ செய்தி ஏஜென்ஸியை மேற்கோள் காட்டி இந்திய வானொலி செய்தி வெளியிட்டுள்ளது. இச்செய்தியானது எந்தளவிற்கு நம்பிக்கைத் தன்மை வாய்ந்தது என்பதில் பலமான கேள்வி இருப்பினும், இச்செய்தியின் பின்னணி ஆபத்தானதும், திட்டமிட்ட சதிச்செயலுமாகும்.

இச்செய்தியின் நம்பகத் தன்மையானது எந்தளவு என்பதற்கு பலமான கேள்வி எழுவதற்கு ஒன்றல்ல, பல காரணம் உண்டு. அமெரிக்காவும், பிரிட்டனும் பாகிஸ்தானை எச்சரித்திருப்பதானால், அதனை சிறிலங்கா அரசுத்தரப்பே பகிரங்கமாக அறிவித்திருக்க முடியும். அதைவிடுத்து சிறிலங்கா மௌனம் சாதிப்பது ஏன்? அத்தோடு, மேற்குலக செய்தி ஸ்தாபனங்களில் இவ்விடயம் விட்டுப் போவதற்கும் வாய்ப்பில்லை.

இதேவேளை, இச்செய்தியை வழங்கிய செய்தி ஏஜென்ஸியும் வெளியிட்ட செய்தி நிறுவனமும் இந்தியாவினுடையவை. இந்திய செய்தி ஏஜென்ஸிகளினதும், செய்தி நிறுவனங்களினதும் நம்பகத் தன்மையைப் பற்றி தமிழ் மக்களுக்குச் சொல்லித் தெரிய வேண்டிய அவசியமில்லை. 1987ஆம் ஆண்டில் இருந்து 1990ஆம் ஆண்டுவரை அதன் புளுகுரைகளை கேட்டவர்கள் தமிழ் மக்கள். இந்நிலையில் இவற்றின் நம்பிக்கை தன்மை பற்றி அவர்கள் நிறையவே அறிந்துள்ளனர்.

இதேவேளை, இத்தகவல் சிறிலங்கா அரச வட்டாரங்களில் இருந்து தெரியவருவதாக வெளியிடப்பட்டுள்ளதினால், செய்தியை உறுதிப்படுத்த வேண்டிய அவசியம் இந்திய செய்தி ஏஜென்ஸிக்கோ, அன்றிச் சிறிலங்கா அரசிற்கோ இல்லை. ஏனெனில் செய்திக்குரிய மூலம் சரி

# செவ்விந்திய மக்கள் சிந்தும் செங்குருதி

செவ்விந்திய மக்களும் விடுதலை இயக்கமொன்றை உருவாக்கி ஆயுதம் தாங்கி போராடத் தொடங்கிவிட்டனர் என்பதே இன்றைய செய்தியாகும். புதிய ஆண்டு ஆரம்பித்தபோது செவ்விந்திய மக்களின் இப்புதிய போராட்டமும் ஆரம்பித்தது. அதுஇன்னமும்தொடர்கிறது. 1492-ம் ஆண்டு கொலம்பஸ் அமெரிக்கா என இப்போது அழைக்கப்படும் பகுதியில் காலடி எடுத்து வைத்த பின்னான 500 ஆண்டுகள் செவ்விந்திய மக்கள் படிப்படியாக அழிந்ததை இவ்வுலகம் அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்தது. ''மாயா'' எனும் தொன்மைமிக்க பெரும் நாகரிகத்திற்கு சொந்தக்காரர்களான இம்மக்கள் இன்று தலைமுறை தலைமுறையாக மத்திய அமெரிக்கப்பகுதிகளில் குறிப்பாக ''குவாத்தமாலா'' மெக்சிக்கோ பகுதிகளில் அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டு கிள்ளுக்கீரையாக மதிக்கப்பட்டு மறக்கப்பட்டு வந்தனர் பெருமைமிக்க மாயன் இனவழித் தோன்றல்கள் இன்று தமது பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு என்பதை நிரூபித்து விட்டனர்.

புதுவருடத்தன்று மெக்சிக்கோவின் தெற்கு தென்கிழக்குப்பகுதியிலே இம்மக்களின் கிளர்ச்சி எவரும் எதிர்பாராத வண்ணம் தோன்றி பரவியது. குறிப்பாக தென்கிழக்கில் சியாபாஸ் பகுதியில் இம்மக்களின் வாழ்க்கை நிலை சொல்லத்தரமன்று. ஒருசில செல்வந்த நிலவுடமையாளர் குடும்பங்கள் கையிலே சிக்கி செவ்விந்திய மக்கள் பெரிதும் துன்பப்பட்டு வந்தனர். எனவே அங்கிருந்துதான் அவர்களது விடுதலை இயக்கம் தோற்றம் பெற்றது. சபோடிஸ்ரா (Zapotista) தேசிய விடுதலை இராணுவம் என்று அவர்கள் தங்கள் இனப்பெயரால் அவ் அமைப்பை அழைக்கின்றனர். உலக விடுதலை இயக்க வரலாற்றிலே கடைசியாக சேர்ந்த இவ்வியக்கம் மிக்க வலிமையோடு கிளர்ந்து மெக்சிக்கோவின் தெற்கில் பல நகரங்களை தமது கையகப்படுத்தி சில நாட்கள் உலகமெங்கும் பரபரப்பை தோற்றுவித்து உலகப்பார்வையை தம்மீது பதிய வைத்தது. மெக்சிக்கோ நகரைச்சுற்றி பல குண்டுவெடிப்புக்கள் இவர்களால் இப்போது நிகழ்த்தப்படுகின்றன. தமது கோரிக்கைகள் யாவும் நிறைவேற்றப்படாவிட்டால் மெக்சிக்கோ நகரை நோக்கியே முன்னேறுவோம் என இம்மக்கள் இப்போது எச்சரிக்கை விடுத்துள்ளனர். மேலும் இவர்கள் போராட்டத்திற்கு இன்னொரு வலுவான காரணியாக மெக்சிக்கோ அண்மையில் 'நப்தா'(Nafta) எனப்படும் வடஅமெரிக்க சுதந்திர வர்த்தக உடன்பாட்டில் இணைந்ததும் அமைந்துவிட்டது. மெக்சிக்கோ, அமெரிக்கா, கனடா ஆகிய மூன்று நாடுகளும் தமக்கு இடையில் தடையற்ற வாணிகத்தை மேற்கொள்ள வழி வகுக்கும் இவ்வுடன்பாட்டால் தமது பாரம்பரிய வேளாண்மைத் தொழில் பாதிக்கப்பட்டு சமமற்ற அநீதியான போட்டி முறையொன்றுக்குள் தாம் தள்ளப்படுவோம் என இம்மக்கள் பெரிதும் அஞ்சுகின்றனர்.

தொடக்கத்தில் வழமை போல மெக்சிக்கோ ஜனாதிபதி கார்லோஸ் சலினாஸ் பாராமுகமாக இருந்தார். பின் இராணுவத்தை ஏவினார்; விமானப்படைகொண்டு குண்டு வீசினார். போராளிகளோ நகரங்களை விட்டு மலைப்பகுதி மறைவிடங்கட்குச் சென்று அங்கிருந்து தமது கிளர்ச்சியை தொடர்ந்தனர். எல்லை மீறிய இராணுவ அடக்கு முறையால் 100 பேர் வரை இதுவரை கொல்லப்பட்டு விட்டனர். இம்மக்களின் கிளர்ச்சிக்கு வலுவான காரணம் இருப்பதும் அத்துமீறிய இராணுவ வன்முறைகளும் எதிர்விளைவுகளை ஏற்படுத்துவதாலும் ஜனாதிபதி இப்போது தயங்குகிறார். இப்போது அமைதியை ஏற்படுத்த பேச்சுக்களை தொடர வாய்ப்பாக தனது உள்நாட்டு அமைச்சரை பதவி நீக்கிவிட்டார். ஏனெனில் இவ்வமைச்சர் சியாபாஸ் பகுதி செல்வந்த குடும்பமொன்றைச் சேர்ந்தவர். அத்தோடு அம்மக்களை அடக்கு முறைக்கும் உட்படுத்தியவர் என குற்றம் சாட்டப்பட்டவர். இப்போது தனது தூதுவராக இப் பகுதிக்கு முற்போக்காளர் ஒருவரை அனுப்புகிறார். எதிர் வரும் ஆகஸ்ட் மாதம் ஜனாதிபதித் தேர்தல் அங்கு வரப் போவதும், தொடரும்கிளர்ச்சி, அந்நிய மூலதன வருகையை தடைசெய்வதோடு அவரது பொருளாதார சீராக்கல் நவீன மயமாக்கல் கொள்கைக்கு பெருத்த அடியாகவும் அமையும் என்பதால் இவ்வாறுஜனாதிபதி நடக்க நேரிடுகிறது. ஏற்கெனவே முன்னெப்போதும் இல்லாத வகையில் நாட்டின் பங்குச் சந்தையில் 6.|. வீழ்ச்சி ஏற்பட்டதாக அறிவிக்கப்படுகிறது. இது மெக்சிக்கோவின் பொருளாதார நிலையை வலுவாக பாதிக்கின்றது.

எனினும் ஆயுதங்களை கீழ வைத்தாலே பேச்சுவார்த்தை என சலினாஸ் கூற, போராளிகளோ தமது விடுதலை அமைப்பை அங்கீகரித்து போர் நிறுத்தம் செய்து இராணுவம் பின்வாங்கி தமது முன்னைய நிலைகட்கு சென்றாலே பேச்சுவார்த்தை என கூறிவிட்டனர். இதற்கிடையில் செவ்விந்திய மக்கள் நிலைக்கு ஆதரவு தெரிவிக்கும் கிறிஸ்தவமத உயர்பீடமும் இவ்விடயத்தில் தலையிட முன்வந்துள்ளது. அத்தோடு குவாத்தமாலா வாழ் செவ்விந்திய மக்கள் நலன்கட்காக குரல் கொடுத்து போராடி அங்கிருந்து நாடு கடந்த மெக்சிக்கோவில் இருக்கும் அமைதிக்காகநோபல் பரிசை பெற்றறிகோபேர்டோமெஞ்சு அம்மையாரும் இப்போது இம் மக்கள் போராட்டம்தொடர்பாக தமது ஈடுபாட்டை காட்டி வருகிறார். 65 வீத பூர்வீக மக்களைக் கொண்ட குவாத்தமாலாவிலும் கெரில்லாப் போராளி இயக்கமொன்று இம் மக்கட்காக போராடுவதை இவர் ஆதரித்து வருவது ஏற்கனவே தெரிந்த விடயமாகும். குவாத்தமாலாவில் கொடும் இராணுவ ஒடுக்கு முறையை செவ்வந்திய மக்கள் சந்தித்து வருகின்றனர்.

மெக்சிக்கோ செவ்விந்திய மக்களின் கிளர்ச்சியானது மீண்டும் உலகின் கவனத்தை, தொன்மை நாகரிகங்களின் சொந்தககாரர்களான இவ்வுலகின் முதல் மக்கள் பூர்வீகக் குடிகள் மீது ஈர்த்துள்ளது. மௌனப்புயலாக இன்று இம்மக்கள் உலகமெங்கும் 70 நாடுகட்கு மேல் தமது நிலைகுறித்து குரலெழுப்பி வருகின்றனர். அருகிப் போகும் இனமாக இவர்கள் இன்று மாறிவிட்டனர். தமது சொந்த மண்ணிலிருந்தும் வளங்களிலிருந்தும் அந்நியப்பட்டு தத்தமது நாட்டு தேசிய அரசுகளில் எவ்வித பங்குபற்றலும் இல்லாது வாழும் இம்மக்களை நான்காம் உலகமாக இப்போது ஐ நா. கணிக்கின்றது. முதல் மூன்று உலகங்களிலும் நிலங்கள் மக்களுக்கு சொந்தமாக இருக்கின்றன. ஆனால் நான்காம் உலகிலோ மக்களே மண்ணுக்குரியவர்களாக மண்ணின் மைந்தர்களாகவுள்ளனர்.

இவர்கள் நிலை இன்று இவ்வாறிருக்கின்றது. அவுத்திரேலியாவின் சொந்தக்காரர்களான பூர்வீக மக்களின் தொகை இன்று 5 இலட்சத்திலிருந்து 60 ஆயிரமாகிவிட்டது. தென், மத்திய அமெரிக்காவிலோ 50 வருடங்களுக்குள்ளே 30 மில்லியனிலிருந்து 5 மில்லியனாகக் குறைந்தது. அமெரிக்க சனத்தொகையில் செவ்விந்தியர் இன்று 0.5 வீதமேயாவார். எனவே பூர்வீக மக்கள் தமது இருப்பிற்காக வாழ்விற்காக போராடும் நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டார்கள். எனவே இப்போது மெக்சிக்கோவின் தற்போதைய நிலை இவ்வாறு உள்ளது. போர்நிறுத்தமொன்றை மெக்சிக்கோ ஜனாதிபதி இப்போது அறிவித்து பேச்சுவார்த்தை ஆரம்பிக்கத் தனது தூதுவரைப் பணித்ததாகத் தெரிகின்றது.

போராளிகள் பேச்சுவார்த்தைக்குச் சம்மதித்தார்களா என்பது இதுவரை தெரியவில்லை.

இன்று இம்மக்களை இல்லாதொழித்து அவர்களின் சாம்பல் மேட்டில் எழுப்பப்பட்டுள்ள நவீன கைத்தொழில் தொழிநுட்ப வளர்ச்சி பெற்ற நாகரிகங்கள் யாவும் இவர்கட்குச் செய்த அநீதியின் விளைவாகவே சூழல் மாசடைதல் எனும் பேரபாயத்திற்கு உட்பட நேர்ந்துள்ளது. ஏனென்றால் இம்மக்களின் வாழ்க்கை முறையோ இயற்கையோடு இணைந்தது. அதன் சமநிலையைக் குலைக்காதது. இவர்களது தாவரங்கள், உயிரினங்கள், மண், காலநிலை, பருவநிலை குறித்தான நுணுகிய அறிவு, தமது சனத்தொகை சமநிலையில் பேணியமை உட்பட்ட அவர்களது இயற்கையின்சீரான முகாமை எல்லாமே இன்றைய மனிதன் அவர்களிடமிருந்து கற்க வேண்டிய பாடங்கள். ஆனால் மனிதனோ அவற்றினைக் கற்காதது மட்டுமன்றி அம்மக்கள் கூட்டத்தையே இல்லாது ஒழிக்க முற்படும்போது விளைவுகள் விபரீதமாவது இயற்கை எமக்களிக்கும் தண்டனையாக அமையும் அல்லவா?

வே. பாலகுமாரன்

நன்றி: புலிகளின்குரல்

# கமரசாயன விற்பனையில் நியாய விலை வேண்டும்

சகலவிதமான கம இரசாயனங்களும் உற்பத்தியாளர்

ண்மிய மேம்பாட்டு நிறுவன யாழ்ப்பாண மாவட்ட

அமைச்சர் பயணம் செய்த

# உலங்குவானூர்தியை நோக்கி

ரங்களில் இருந்து தெரியவருவதாக வெளியிடப்பட்டுள்ளதினால், செய்தியை உறுதிப்படுத்த வேண்டிய அவசியம் இந்திய செய்தி ஏஜென்ஸிக்கோ, அன்றிச் சிறிலங்கா அரசிற்கோ இல்லை. ஏனெனில் செய்திக்குரிய மூலம் சரியாகச் சுட்டிக்காட்டப்படவில்லை. அத்தோடு, சிறிலங்கா அரச வட்டாரங்களும் செய்தி ஏஜென்ஸிகளும் பொய்ச் செய்திகளைப் புனைவதில் இந்திய செய்தி ஸ்தாபனங்களுக்குச் சமனான அளவில் புகழ் பெற்றவை. இவை, ஆறில்லாத இடத்தில் பாலம் கட்டும் ரகத்தைச் சேர்ந்தவை.

ஆனால், இச்செய்தி அமைப்புக்கள் இக்கதையை உருவாக்கினவா? அல்லது துளியளவாவது இதில் உண்மையுண்டா? என்பதனை ஆராய்ந்து அறியவேண்டிய அவசியமும்இல்லை. இந்தியாவும், சிறிலங்காவும் ஒரேவழியில் இணைந்து தமிழர் தேசிய இனவிடுதலைப் போராட்டத்தை ஒழித்துவிட விருப்பம் கொண்டே செயற்படுகின்றன. ஆகையில் இதனை இந்தியா உருவாக்கியதா? சிறிலங்கா உருவாக்கியதா? என்பதை இட்டு இவை இரண்டும் முரண்பட்டுக் கொள்ளப் போவதில்லை.

இச்செய்தியில் பாகிஸ்தானுக்கும், விடுதலைப்புலிகளுக்கும் நெருக்கமான உறவு வளர்ந்துவிட்டது. புலிகளுக்கு உதவிபுரிவதை பாகிஸ்தான் உடன்நிறுத்த வேண்டும் என பாகிஸ்தானை வெளிப்படையாக எச்சரிக்காவிட்டாலும், விடுதலைப்புலிகளுடன் பாகிஸ்தான் உறவு கொள்வது கூடாது என எச்சரிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இவ் எச்சரிக்கை பலவீனமானதாக இருப்பினும் இது புறக்கணித்துவிட கூடியது அல்ல.

ஆனால், இவ் எச்சரிக்கையானது, பலமோ, பலவீனமோ இந்திய மக்களை வெகுவாகக் குழப்பக் கூடியதாகும். பாகிஸ்தான உருவானதில் இருந்தே இந்திய மக்கள் அதனுடன் பகையுணர்வு கொண்டுள்ளனர். இப்பகையுணர்வை நீக்கப் பெரும் முயற்சிகள், உடன்பாடுகள் காணப்பட்ட போதும், சமாதானத்தை எட்டமுடியவில்லை. இருதரப்பும் ஒன்றை ஒன்று குறை கூறிய வண்ணம் உள்ளதோடு, பரஸ்பர நம்பிக்கையின் அடிப்படையில் செயற்படத் தயாராக இல்லாததே இதற்குக் காரணமாகும்.

இந்நிலையில் தமிழர் இனப் போராட்டத்தை பாகிஸ்தானுடன் தொடர்பு படுத்திவிடுவதென்பது இந்திய மக்களின் மனங்களில் தமிழர் தேசிய இனப்போராட்டத்திற்கு எதிராக வெறுப்புணர்வை ஊட்டுவதே ஆகும். இதில், இந்தியாவின் பங்கு, சிறிலங்காவின் பங்கு எவ்வளவு எனப் பாகம் பிரிக்கமுடியாது. ஆயினும், இந்தியாவின் பங்கு கணிசமானதாகும். இதனை அண்மையில் விடுதலைப்புலிகளுக்கு எதிராக வெளிநாடுகள் பெரும் பிரசார நடவடிக்கைகளை இந்தியா மேற்கொண்ட முடிவின் ஓர் அங்கமாக இடம்பெற்ற ஒத்திகையா என்றே எண்ணவைக்கிறது.

## நியாய விலை வேண்டும்

சகலவிதமான கம இரசாயனங்களும் உற்பத்தியாளர்களால் போத்தல்களில் குறிப்பிடப்பட்டுள்ள விலைக்கே விற்கப்பட வேண்டும் என்றும், கூடிய விலைக்கு இவை விற்கப்படுவதைத் தடை செய்வது என்றும் கம இரசாயன விற்பனையாளர்களுக்கான கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டு இருக்கிறது. விவசாயிகளின் நன்மை கருதி தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கம இரசாயன விற்பனையாளர்களுக்காக விவசாயத் திணைக்களக் கூட்ட மண்டபத்தில் நடத்திய இக் கூட்டத்திற்கு திரு. ஹரிச்சந்திரா தலைமை வகித்தார். இக்கூட்டத்தில் உதவி விவசாயப் பணிப்பாளர் மற்றும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன யாழ்ப்பாண மாவட்ட இணைப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் போத்தல்களில்' உள்ள லேபல்களில் எந்த மாற்றமோ அல்லது அழிப்புகளோ செய்யக் கூடாது எனவும், உத்தரவு பெற்ற முகவர்கள் மூலமாக மட்டுமே கம இரசாயனங்கள் கொள்வனவு செய்யப்பட வேண்டுமெனவும், மட்டுப்படுத்தப்பட்ட மற்றும் தடை செய்யப்பட்ட கம இரசாயனங்கள் விவசாயப் போதனாசிரியரின் சிபாரிசுடனேயே விற்பனை செய்யப்பட வேண்டுமெனவும் மேலும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## மாணவர் உணவு முத்திரை கிராமசேவகர் விநியோகம்

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்கு அதிபர்கள் மூலமாக வழங்கப்பட்டு வந்த உணவு முத்திரைகள் இனிமேல்கிராம உத்தியோகத்தர் மூலம் வழங்கப்படும் வறுமை நிவாரண முத்திரையுடன் சேர்க்கப்படவுள்ளது.

புதியதிட்டத்தின்படி மாணவர் ஒருவருக்கு ஐம்பது ரூபா என்ற அடிப்படையில் 12 மாதத்திற்கும் உணவு முத்திரை வழங்கப்படவுள்ளது. ஒரே அட்டையில் பன்னிரண்டு மாதங்களுக்குமுரிய ஐம்பது ரூபா புள்ளிகள் அச்சிடப்பட்டு கிராமசேவகர் மூலம் வழங்கப்படவுள்ளது. அதைப் பெறும் மாணவர்கள் உரிய சங்கக் கிளையில் கொடுத்து மாதாந்தம் பொருள்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

## பெறுபேறு வெளிவந்தன

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் மருத்துவபீட இரண்டாம் ஆண்டுப் பரீட்சையினதும், உயிரியல் தொழில்நுட்பத்தில் முதுமாணி பரீட்சையினதும், பட்டப்பின் கல்வி டிப்ளோமா பரீட்சையினதும், சித்த வைத்தியத் துறையின் இறுதிப் பரீட்சையினதும் பெறுபேறுகள் அண்மையில் வெளியிடப்பட்டுள்ளன. மருத்துவ பீட இரண்டாமாண்டுப் பரீட்சையில் சுப்பிரமணியம் மகாதேவா விருதையும், சாள்ஸ் கனகசுந்தரம் நினைவு தங்கப்பதக்கத்தையும், முருகேசர் தம்பையா நினைவு தங்கப் பதக்கத்தையும் மருத்துவபீட மாணவர் ராஜேந்திரா பெற்றுக் கொண்டுள்ளார்; செந்தூரன் உயிரியல் தொழில் நுட்பத்தில் முதுமாணி பட்டம் பெற்றுக் கொண்டுள்ளார். சித்த மருத்துவத் துறையில் கலாநாயகி சிங்கநாயகம் நினைவுப் பரிசையும், பல்கலைக்கழக பரிசையும் செல்வி சிவாமனா பெற்றுள்ளார்.

# உலங்குவானூர்தியை நோக்கி போராளிகள் துப்பாக்கிப் பிரயோகம்

### ஜம்மு காஷ்மீரில் சம்பவம்

(டில்லி)

ஜம்மு காஷ்மீர் மாநிலத்திற்கு அண்மையில் விஜயம் மேற்கொண்ட இந்திய உள்துறை அமைச்சர் எஸ் பி. சவான் பயணம் செய்த உலங்கு வானூர்தி போராளிகளின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகியது.

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில தோடாக் மாவட்டத்தில் உலங்கு வானூர்தி மூலம் சுற்றுப்பயணம மேற்கொண்டிருந்த அமைச்சர் அங்கு தரையிறங்க முற்பட்ட போது போராளிகள் அவ் உலங்கு வானூர்தியை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

தோடாக் மாவட்டத்தின் மலைப்பகுதிகளில் ஒளித்து இருந்த போராளிகள் தரையிறங்கிய உலங்கு வானூர்தியை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் அரசாங்க துருப்பினர் எதிர்த்து துப்பாக்கிச் சூடு நடத்தியதாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை பாகிஸ்தானிய தரப்பிலிருந்து ராக்கட்டுகளும் ஏவப்பட்டதாக புதுடில்லியிலிருந்து வெளியிடப்படும் இந்துஸ்தான் டைம்ஸ் பத்திரிகை கூறியுள்ளது.

## இந்தியப் பிரதமர் ராவ் சுவிட்சர்லாந்துக்கு விஜயம்

(டில்லி)

சுவிட்சர்லாந்து மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகளில் ஆறுநாள் சுற்றுப்பயணமொன்றை மேற்கொண்டு இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் நேற்றுப் பயணமானார். சுவிட்சர்லாந்தின் டாவோஸ் நகரில் நடைபெறவுள்ள சர்வதேச பொருளாதார அரங்குக் கூட்டத்தில் உரை நிகழ்த்த இருக்கும் பிரதமர் நரசிம்மராவ் இந்தியாவின் தாராளமயமாக்கப் பட்டுள்ள பொருளாதார கொள்கைகள் குறித்து சர்வதேச தொழிலதிபர்களுக்கு எடுத்து விளக்கவுள்ளார்.

அங்கிருந்து ஜேர்மன் தலைநகர் பொன்னுக்கு செல்லும் இந்தியப் பிரதமர் ஜேர்மன் அதிபர் ஹெல்மட் ஹேலுடன் பேச்சு நடத்துவார். பின்னர் பேர்லின் சென்று அங்கு உத்தியோகபூர்வ சந்திப்புக்களைநடத்தவுள்ளார்.

## இல்மனைற் கண்டுபிடிப்பு

(சென்னை)

கேரள மாநிலத்தின் கொல்லம் மாவட்டத்திலிருந்து தமிழ்நாட்டின் கன்னியாகுமரிவரையிலான கடற்பரப்பில் இல்மனைற் என்னும் கனியுப்பு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சுமார் பன்னிரண்டுகோடி தொன் எடையுள்ள இக்கனியுப்பு இருப்பது பற்றி மத்திய அரசின் வழக்கத்தில் அல்லாத எரிபொருள் துறை அமைச்சர் எஸ். கிருஷ்ணகுமார் கொல்லம் நகரில் செய்தியாளர் மத்தியில் பேசும்போது தெரிவித்தார். இதன் கனிமத்தைப் பயன்படுத்துவது பற்றி விரைவில் முடிவு செய்யப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## புதுடில்லிகுண்டுவெடிப்பில் 16 பேர் காயம்

(டில்லி)

புதுடில்லியின் கனாட் பிளேஸ் பகுதியில் அமைந்துள்ள ஒடியன் சினிமாதியேட்டரில் நேற்று முன் தினம் மாலை இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவத்தில் பதினாறு பேர் காயமடைந்துள்ளனர். இச் சினிமா தியேட்டரின் ஒரு சீற்றுக்கு அடியில் நாட்டு வெடிகுண்டு ஒன்று மறைத்து வைக்கப்பட்டிருந்ததாக பொலிசார் கூறியுள்ளனர். இந்தப் பகுதியில் போக்குவரத்துக்கு தடை விதிக்கப்பட்டிருப்பதுடன், காயமடைந்தவர்கள் அனைவரும் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டிருப்பதாகவும், தீவிர புலன் விசாரணை மேற்கொள்ளப்படுவதாகவும் கூறப்படுகிறது. குண்டு வெடிப்பு சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு உள்துறை இணை அமைச்சர் ராஜேஷ் பைலட் விஜயம் செய்தார்.

## கோவா முதல்வர் சந்தித்தார்

(சென்னை)

சென்னைக்கு வந்துள்ள கோவா மாநில முதல்வர் டாக்டர் வில்பிரட்டி சூசா தமிழக முதல்வர் ஜெயலலிதாவை அவரது இல்லத்தில் நேற்று முன்தினம் சந்தித்தார். இச் சந்திப்பு சுமார் அரைமணி நேரம் நீடித்தது.

ஈழநாதம்

# 4 ஆம் ஆண்டு நிறைவுப் போட்டி முடிவுத்திகதி நீடிப்பு

சிறுகதை, கவிதை,
மாணவர்களுக்கான கட்டுரை
முடிவுத்திகதி: **05-02-1994**

முதலாம் பரிசு: தங்கப்பதக்கத்துடன் கூடிய 1500 ரூபா ரொக்கப் பணம்.
இரண்டாம் பரிசு: 1500 ரூபா ரொக்கப் பணம்.
மூன்றாம் பரிசு: 1000 ரூபா ரொக்கப் பணம்.

போட்டியில் பங்குபற்றி பரிசில்களை வெல்லுங்கள்



## கணக்குப் பதிவியலாளர் தேவை

கல்வித்தகைமை:- கணக்கியலை ஒரு பாடமாகக் கொண்ட க. பொ. த. (உயர்தரம்) பத்திரம் அல்லது அதற்குச் சமமானவேறு தகைமைகள்.

வயது: *25 - 40* வருடம்

சம்பளம்: நேரில் பேசிக் கொள்ளப்படும்.

தகுதியான விண்ணப்பதாரர் 1994-02-04 வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு நேர்முகங் காணலுக்குத் தகைமைச் சான்றிதழ்களுடன வரவும்.

இராசன் அச்சகம்
144, அருச்சுனா வீதி, யாழ்ப்பாணம்.
(7381)


## அறிவித்தல்

### தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

யாழ். மாவட்டம்

எதிர்வரும் வெள்ளிக்கிழமை 4-2-94 காலை 9.00 மணிக்கு பொது நிர்வாக சபைக் கூட்டமும், காலை 10.00 மணிக்கு பொதுச்சபைக் கூட்டமும், எழிலகத்திற்கு முன்பாக அமைந்துள்ள புதிய விஞ்ஞானக் கல்விக் கழகத்தில் நடைபெறும். பல முக்கிய விடயங்கள் கலந்தாலோசிக்கவிருப்பதால் ...

# இலக்கியம் படைப்பதற்கு இங்கு எவரும் தடையாகவில்லை

## 'காலங்கள்' வெளியீட்டில் புதுவை இரத்தினதுரை

(யாழ்ப்பாணம்)

இந்த மண்ணில் வாழும் எழுத்தாளர்கள் இலக்கியங்கள் படைக்க வேண்டும். அவர்கள் இலக்கியப் படைப்பில் ஈடுபடுவதற்கு யாரும் தடைவிதிக்க வில்லை.

இவ்வாறு கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை அவர்கள் தெரிவித்தார்.

நேற்று மாலை, யாழ். பல்கலைக் கழக கைலாசபதி மண்டபத்தில் இடம் பெற்ற எழுத்தாளர்சாந்தனின்'காலங்கள்' சிறு கதைத் தொகுதி வெளியீட்டு விழாவிற்கு தலைமை வகித்து பேசும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசும் போது, இந்த மண்ணிலிருந்து புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் தங்கியுள்ள சில எழுத்தாளர்கள் தாம் புலம் பெயர்ந்து சென்றதை தமது எழுத்துக்களில் நியாயப் படுத்த முனைகின்றனர்.

வெளிநாடுகளிலும், கொழும்பிலும் உள்ள எழுத்தாளர்கள் இந்த மண்ணிலிருந்து எழுதும் எழுத்தாளர்களின் படைப்புகளையும். எமது மக்களையும் கொச்சைப் படுத்தும் செயலில் ஈடுபட்டுள்ளனர்.

வெளிநாடுகளில் வாழ்ந்து வரும் எழுத்தாளர்கள், தாம் அங்கு வாழ்வதற்கு காரணம் தேடிக் கொண்டிருக்கிறார்கள்.

மூச்சு விடுவதற்கு நாம் யாரிடமும் அனுமதி கேட்பதில்லை. இதே மாதிரி எழுதுவதற்கும் அனுமதி தேவையில்லை.

இங்கிருக்கும் எழுத்தாளர்கள், ஆக்க இலக்கியப் படைப்புகளில் ஈடுபட வேண்டும். அவர்கள் எழுதாமலிருந்தால் அதற்கு எவரும் பொறுப்பாளிகள் அல்ல என்று குறிப்பிட்டார்.

இந் நிகழ்வில் செல்வி இ. ஜெயரஞ்சனி வரவேற்புரையாற்றினார். டானியல் அன்ரனி வெளியீட்டுரை நிகழ்த்தினார்.

மூத்த எழுத்தாளர் வரதர் முதற்பிரதியை பெற்றுக்கொண்டார். சோ. பத்மநாதன் செல்வி ப. நாமகள், கலாநிதி நா. சுப்ரமணியம் ஆகியோர் மதிப்புரை நிகழ்த்தினர். நூலாசிரியர் பதிலுரையாற்றினார்.

# ஆசிரியர்களுக்கு விசேட பதவி வழங்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

மாணவர்களுக்கு நன்முறையிற் கல்வியூட்டுவதுடன் மட்டும் நில்லாமல் சாரணியம், உடற்பயிற்சி, விளையாட்டு, நாடகம் போன்றவற்றில் அவர்களுக்குப் பயிற்சி அளித்து, அவர்களின் ஆளுமையை விருத்தி செய்து சமுதாயத்துக்குப் பயனுள்ளவர்களாக அவர்களை ஆக்கும் ஆசிரியர், இந்தக் காரணங்களால் அதிபராகவோ, கல்வி அதிகாரியாகவோ பதவி உயர்வு பெற்றதும், தொடர்ந்தும் இதே பணிகளைச் செய்ய முடியாத நிலைக்கு ஆளாகின்றனர். அவரின் திறமையும், சக்தியும் அலுவலகக் கோப்புகளையும், சுற்று நிருபங்களைத் தயாரிப்பதிலும் விரயமாகின்றன. அவரிடம் கற்கின்ற வாய்ப்புகளை மாணவர் இழக்கின்றனர். இவ்வாறு அகில இலங்கை வர்த்தகக் கலைமன்றம் கல்வி அமைச்சருக்கு அனுப்பிய மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த மகஜரில்-

எதிர்காலக் குடிமக்களாகிய மாணவர்களைப் பாதிக்கும் இந்த நிலை மாற்றப்பட வேண்டும் என்று சங்கம் விரும்புகிறது. அனுபவமும், ஆற்றலும் இருந்தும் நிர்வாகப் பதவிகளைச் சிறிதும் விரும்பாமல் தொடர்ந்தும் ஆசிரியர்களாகவே சேவை செய்வதில் ஆர்வமுடையவர்களை ஊக்குவிக்க வேண்டும், அவர்களுக்கு உற்சாகமூட்டும் வகையிலும், திறமைசாலிகளைஆசிரிய சேவைக்கு ஈர்ப்பதற்காகவும் விசேட ஆசிரியப் பதவிகளை மீண்டும் உருவாக்கி நடைமுறைப் படுத்துமாறு இம் மன்றம் கேட்டுக் கொள்கிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 507 இலங்கை அகதிகள் மன்னார் வந்தனர்

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து மற்றுமொரு தொகுதி இலங்கை அகதிகள் நேற்று மன்னார் வந்து சேர்ந்தனர். இந்த இரண்டாவது தொகுதியில் 507 பேர் அடங்கியிருந்தனர்.

கடந்த சில தினங்களுக்கு முன் திரும்பிய முதலாவது தொகுதி அகதிகளில் 509 பேர் அடங்கியிருந்தமை குறிப்பிடத் தக்கது. சுமார் மூவாயிரம் அகதிகள் மன்னாருக்கு இவ்வாறு கொண்டுவரப்படுவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## யாழ். மாவட்ட

மரணவிகிதம் 37.6 மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலும். மூன்றாவதாக 35.9 விகிதம் கோப்பாய் பகுதியிலும் இடம்பெற்றிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை ஆகக் குறைந்த சிசு மரண வீதமான 25.8 யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரிகள் பகுதியில் பதிவு ...

# 8ஆம் ஆண்டிலும் புல. பரிசில் பரீட்சை

(கொழும்பு)

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையின் பெறுமதியை அதிகப்படுத்துவது மட்டுமன்றி எட்டாம் ஆண்டிற்கான புலமைப் பரிசில் பரீட்சை ஒன்றையும் எதிர்காலத்தில்நடத்தநடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் ஜே எம். லொக்குபண்டார தெரிவித்துள்ளார். ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் அதிகளவு மாணவர் ...

# விவேகானந்தர் ஜெயந்தி விழா

திருநெல்வேலிஇராமகிருஷ்ணாலயத்தில் நாளை புதன் கிழமை சுவாமி விவேகானந்தரின் 131வது ஜெயந்தி தினம் கொண்டாடப்படவுள் ...

சேரன் மாதேவி தொகுதி

# அ.அ.தி.மு.க. உறுப்பினரின் தெரிவு நீதிமன்றம் ரத்து

(சென்னை)

கடந்த தமிழ்நாட்டு தேர்தலில் அண்ணா தி.மு.க. வேட்பாளர் ஒருவர் தெரிந்தெடுக்கப்பட்டது செல்லாது என சென்னை உயர் நீதி மன்றம் தீர்ப்பளித்துள்ளது.

சேரன் மாதேவி தொகுதியிலிருந்து தமிழ்நாட்டு சட்டசபைக்கு சென்ற தேர்தலில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத்தைச்சேர்ந்த தேர்ந்தெடுக்கப்பட்ட ஆர். புதுவையினார் ஆதித்தனின் தெரிவு செல்லாதுஎன சென்னை உயர்நீதி மன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

தமிழகசட்டசபையின் முன்னாள் சபாநாயகரும் இத்தொகுதியில்சுயேட்சையாகப் போட்டியிட்டவருமான பி. எச். பாண்டியன் தாக்கல் செய்த மீட்மனுவின் மீது நீதிபதி கே. வெங்கடசாமி இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

புதுவையினார் ஆதித்தன் தேர்தல் சட்டத்தின் விதிக்கப்பட்ட வரம்புக்கு மேல் தேர்தல் செலவுகள் செய்துள்ளார் என்றும் அதனால் அவர் தேர்ந்தெடுக்கப்பட்டது செல்லாதுஎன்றும்நீதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இந்தியாவின் நான்கு கி. மீ. பாயும்

# டாங்கி எதிர்ப்பு ஏவுகணை பரிசோதனையில் வெற்றி

இந்தியா டாங்கி எதிர்ப்பு ஏவுகணையான நாக் ஏவுகணைபரிசோதனையைவெற்றி கரமாக பூர்த்தி செய்துள்ளது சென்ற வாரம் இறுதியில் இவ் ஏவுகணைகள் சம்பந்தமாக நான்கு பரிசோதனைகள் நடந்தன இந்த ஏவுகணை 4 கிலோமீற்றர்பாயும் இந்திய பாதுகாப்பு ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனம் இதை தயாரித்திருந்தது 1996 ஆம் ஆண்டு முதல் இது பாவனைக்கு வரும்.

# காஷ்மீர்பற்றி குற்றம் சாட்ட பாக்.இற்கு உரிமையில்லை

## உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான்

காஷ்மீரில் மனித உரிமைகள் மீறப்படுவதாகக் குற்றம் சாட்டுவதற்கு பாகிஸ்தானுக்கு தார்மீக ரீதியில் கூட எந்த உரிமையும் கிடையாது என்று இந்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் கூறியுள்ளார்.

காஷ்மீர் பள்ளத்தாக்குப் பகுதியில், தற்போதைய பிரச்சினைகளைத் தோற்றுவித்ததே பாகிஸ்தான் தான் எனவும் குற்றம் சாட்டி ஜம்முவில் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் மேலும் கூறுகையில், பொது வேலை நிறுத்தப் போராட்டம் ஒன்றை நடத்தும்படி பாகிஸ்தான் அரசு அழைப்பு விடுத்திருப்பதையும் கடுமையாகச் சாடினார். ஜம்மு, தோடா, கிஷ்வார் ஆகிய மாவட்டங்களில் மூன்று நாள் சுற்றுப் பயணத்தை முடித்த அவர் ஜம்முவில் செய்தியாளர்களிடம் பேசினார்.

பாகிஸ்தான் அரசு தனது சொந்த மாகாணமான சிந்துவிலும், ஏனைய சில மாகாணங்களிலும் அரச படையின் மூலம் மிகக் கேவலமான முறையில் மனித உரிமைகளை மீறியிருக்கிறார்கள் என்ற உண்மையை பாகிஸ்தான் அரசு முற்றிலும் மறந்து போய் இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

## அமெரிக்காவில்

திருடப்பட்டதாக கருதப்பட்டதாக தெரிவித்துள்ளார். இதற்காக தான் தலை மறைவாகவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

## இ. தொ. கா

தொ. காங்கிரஸ் இரண்டாக பிரியும் நிலை உள்ளதாக ... எனவே இந்த நிலையை ... ர்க்கும் நோக்குடனே தா... பேச்சுவார்த்தைக்குதயார் ... இருப்பதாகவும்செல்லச்சா... தெரிவித்தார். மத்தி... மாகாண சபையில் ஐக்கிய தேசிய கட்சியின் ஆட்சியை காப்பாற்றும் நோக்குடன் ஏற்பட்ட முயற்சியினாலேயே இ. தொ. காவின் இந்த பிளவு ஏற்பட்டதாகவும், எனவே இது தொடர் ...

யாழ். மாவட்டம்

எதிர்வரும் வெள்ளிக்கிழமை 4-2-94 காலை 9.00 மணிக்கு பொது நிர்வாக சபைக் கூட்டமும், காலை 10.00 மணிக்கு பொதுச்சபைக் கூட்டமும், எழிலகத்திற்கு முன்பாக அமைந்துள்ள புதிய விஞ்ஞானக் கல்விக் கழகத்தில் நடைபெறும். பல முக்கிய விடயங்கள் கலந்தாலோசிக்கவிருப்பதால் தயவு செய்து சகல நிர்வாக சபை உறுப்பினர்களையும், நிர்வாகிகளையும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

பொதுச் செயலாளர்,
யாழ். மாவட்டம்.

(ஙி-8492)


வதாக 35.9 விகிதம் கோப்பாய் பகுதியிலும் இடம்பெற்றிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை ஆகக் குறைந்த சிசு மரண வீதமான 25.8 யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரிகள் பகுதியில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

நாம் எமது குழந்தைகளில் கூடிய கவனம் செலுத்தினால் இந்த சிசுக்களின் மரண விகிதத்தை வெகுவாக குறைக்க முடியும் என சுகாதார திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.


வெலிங்டன் சந்திக்கருகில்!

UNIKCO

COMPUTER CENTRE

- WORD PROCESSING and MS - DOS
- LOTUS 1-2-3 and MS - DOS
- dBASE III PLUS and MS - DOS
- BASIC LANGUAGE (Including Sound, Graphics and Files)
- DATA ENTRY OPERATOR TRAINING

புதிய பிரிவுகள் ஆரம்பம்:

04-02-94 (திங்கள், புதன், வெள்ளி)
05-02-94 (சனி, ஞாயிறு)

உங்கள் எதிர்காலத்திற்கு ஏற்ற சரியான கணனிக் கல்வியை தெரிவு செய்வதன் மூலம் உங்கள் காலம் வீணாவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.



UNIKCO COMPUTER CENTRE
37, CLOCK TOWER ROAD,
JAFFNA.

(ஙி-8491)


டிற்கான புலமைப் பரிசில் பரீட்சை ஒன்றையும் எதிர்காலத்தில் நடத்த நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் ஜே. எம். லொக்குபண்டார தெரிவித்துள்ளார். ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் அதிகளவு மாணவர் சித்தி பெறத் தவறுகின்றனர். இவர்களுக்கு மீண்டும் சந்தர்ப்பம் வழங்கவே இப் புதிய திட்டம் என அமைச்சர் கூறினார்.

## ஐ. நாவின்

செயற்பட்டிருக்கின்றது.

கடந்த ஆண்டும் இம் மாதிரியான மாநாடு ஜெனீவாவில் நடைபெற்றது. அதற்கு சில நாட்களின் முன் சிறிலங்கா அரசு சில அவசர கால சட்டங்களை தளர்த்தியது. இதன்பின் வடக்கு கிழக்கில் தேர்தல் நடத்தப்போவதாகவும் அரசு அறிவித்தது எனவும் பி.பி.ஸி சுட்டிக்காட்டியது.

ஐ. நா. வின் மாநாடு நேற்று ஆரம்பமானது. எனவே அரசு இரு புதிய அறிவிப்பை விடுத்துள்ளது. அதாவது அடிப்படை மனித உரிமை மீறல் தொடர்பாக விசாரிக்க மனித உரிமைகுழு ஒன்று அமைக்கப்படும், ஒரு ஆண்டுக்கும் மேலாக காணாமற்போனவருக்கு மரண சான்றிதழ் வழங்கும் வகையில் சட்டம் திருத்தப்படும்.

## யாழ்

இறங்குதுறைக்கு வரும்.

இதேவேளை எக்ஸ்றே கருவி நேற்றிரவு யாழ். வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டது. (யோ)

## மெதடிஸ்த

தலைவர்களையும் பொது மக்களையும் சந்தித்து பேசுவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. அண்மையில் கொழும்பு ஆயர் அதிவண நிக்கலஸ் மார்க்கஸ் பெர்னான்டோ தலைமையிலான மதக்குழு யாழ். வந்து திரும்பிய பின்னர் மெதடிஸ்த திருச்சபையின் யாழ். விஜயம் அமைகின்றது.

## ஜெயந்தி விழா

திருநெல்வேலி இராமகிருஷ்ணாலயத்தில் நாளை புதன் கிழமை சுவாமி விவேகானந்தரின் 131வது ஜெயந்தி தினம் கொண்டாடப்படவுள்ளது. அதிகாலையும் மாலையும் நிகழ்வுகள் இடம்பெறும்.

## சீமெந்து ஊழியர் கொடுப்பனவு

காங்கேசன் சீமெந்து கூட்டுத்தாபன ஊழியர்களின் மார்கழி மாத சம்பள கொடுப்பனவு இன்று வர்த்தக வங்கியில் வைத்து வழங்கப்படும் என பிரதம கணக்காளர் பத்மானந்தா அறிவித்துள்ளார்.

## படையினரை

போதே அவ்வியக்கம் இவ்வாறு கூறியது மேலும் இப் படுகொலைகளுக்கு காரணமான படையினர் மீது நீதி விசாரணை நடத்துவது அவசியம் என தெரிவித்துள்ளது.

## பகுதிநேர

விரும்புவோர், கேட்குமிடத்து விரும்பினால் விண்ணப்பிக்கலாம். இவ்வாறு பிரதிக் கல்விப்பணிப்பாளர் துரை. தியாகராசா அறிவிக்கிறார்.

## மீனவர்

இவர், ஆழமற்ற கடல் பகுதியை அண்மித்தபோது நீரில் கால் நடையாக வந்த இராணுவத்தினர் இவர்மீது துப்பாக்கி பிரயோகம் செய்தனர்.

கால்கள் இரண்டிலும் காயமடைந்த இவரை சக தொழிலாளிகள் தூக்கி வள்ளத்தில் ஏற்றி கரைசேர்த்தனர்.

காயமடைந்த தொழிலாளி யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

## க. பொ. த.

கொழும்பு, அம்பாறை போன்ற இடங்களில் மதிப்பீட்டு வேலைகள் நடைபெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (பா)

களில் மூன்று நாள் சுற்றுப் பயணத்தை முடித்த அவர் ஜம்முவில் செய்தியாளர்களிடம் பேசினார்.

பாகிஸ்தான் அரசு தனது சொந்த மாகாணமான சிந்துவிலும், ஏனைய சில மாகாணங்களிலும் அரச படையினர் நடத்தும் மோசமான சித்திரவதைகளையும், அட்டூழியங்களையும் செய்துள்ள

தெரிவித்தார். மத்திய மாகாண சபையில் ஐக்கிய தேசிய கட்சியின் ஆட்சியை காப்பாற்றும் நோக்குடன் ஏற்பட்ட முயற்சியினாலேயே இ.தொ.காவின் இந்த பிளவு ஏற்பட்டதாகவும், எனவே இது தொடர்பாக அரசாங்கம் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் கூறினார்.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

31-01-1994

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 514

வடபகுதிக்கு உள்ளேவந்த வாகன இலக்கங்கள்:

42-0933, 41-4129, 24-6316, 26-5848, 26-2366
26-3130, 26-2108, 41-9663, 27-7862, 42-2355
26-3545, 24-5177, 41-1996, 24-1983, 24-6475
24-9938, 24-4481, 26-2827, 28-1862, 24-5036
26-1690.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:
24-4491, 26-2786, 42,1293, 27.6415, 24-5418
41-7563, 24-4282, 41-9530, 24-5137, 26-5882
27-9489, 24-0207


## கண்ணீர் அஞ்சலி

வைரமுத்து குணசிங்கம்

தோற்றம்:
1.10.1928

மறைவு:
29.1.1994

எமது நிலையத்தின் தலைவராக, பொருளாளராக, கணக்குப்பரிசோதகராக அரும்பணியாற்றிய திரு. வைரமுத்து குணசிங்கம் அவர்களின் மறைவு எமக்குப் பேரிழப்பாகும். அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியை செலுத்துவதோடு அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இமையாணன்,
உடுப்பிட்டி.

கண்ணகி சனசமூக நிலையம்
(7383)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 01ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.